# மாதொருபாகன் நாவல் வெளிப்படுத்தும் சமூகம்

ஆசிரியர்
முனைவர் **மார்கண்டன்**

**மகிழினி பதிப்பகம்**
எண். 1, இருசப்பா தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை 600 005. (அருகில் N.K.T. மகளிர் உயர்நிலைப்பள்ளி)
அலைபேசி: 6380701049
மின்னஞ்சல் : magizhinipublication2023@gmail.com

## நூல் விவரக்குறிப்பு

| தலைப்பு: ஆட்டனத்தி ஆதிமந்தியில் ஃப்ராய்டிய உளவியல் | பொருள்: **ஆய்வு**

| மொழி: **தமிழ்** | ஆசிரியர்: **முனைவர் மார்கண்டன்**©

| **முதற்பதிப்பு, பிப்ரவரி - 2025**

| நூலளவு: 1x8 டெம்மி | பக்கங்கள்: 78

| வெளியீடு: **மகிழினி பதிப்பகம்**

எண். 1, இருசப்பா தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை 600 005. (அருகில் N.K.T. மகளிர் உயர்நிலைப்பள்ளி)
அலைபேசி: 6380701049
மின்னஞ்சல் : magizhinipublication2023@gmail.com
அட்டை & நூல் வடிவமைப்பு:
அர்ஜூன்செல்லம் வரைகலை, 6380701049
அச்சாக்கம்:

| விலை : ₹ 120/-

**மகிழினி பதிப்பகம்**

எண். 1, இருசப்பா தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை600 005. (அருகில்N.K.T. மகளிர் உயர்நிலைப்பள்ளி)
அலைபேசி: 6380701049
மின்னஞ்சல் : magizhinipublication2023@gmail.com




# நன்றிக்கு உரியவர்கள்

# பொருளடக்கம்

வ.எ. பக்கம்

முன்னுரை

1 தமிழ் நாவல் வரலாற்றில் 'மாதொருபாகன்'

2 மாதொருபாகனில் பெண் புனைவுகள்

3 மாதொருபாகனில் ஆண் புனைவுகள்

முடிவுரை

துணைநூற் பட்டியல்

# முன்னுரை

ஒரு வரி கதையை தோராயமாக நூற்றி எண்பத்தி ஒன்பது பக்கத்திற்கு நகர்த்திச் சென்று இருக்கிறார் ஆசிரியர். ஒவ்வொரு பக்கத்திலும் குறிப்பிட்ட கதாபாத்திரங்களே தவழ்ந்தாலும் கதையின் ஓட்டம் ரசிக்க வைக்கிறது. தவிக்க வைக்கிறது. எழுத்து ஆளுமை நம்மை கட்டி போட்டு கரைய வைக்கிறது. ஆனால் எந்த ஒரு பக்கத்தையும் அத்தனை எளிதில் விட்டு கடந்து விட முடியாது.

ஆட்டூர் என்ற கிராமத்தில் நாயகன் காளி, நாயகி பொன்னா, நாயகனின் அம்மா சீராயி, மச்சான் முத்து மற்றும் சித்தப்பா நல்லையன் இந்த கதாபாத்திரங்களை சுற்றியே நாவல் நகர்கிறது.

ஒரு சமூகம் யாரிடம் எது இல்லையோ அதையே குத்தி குத்தி காட்டி அவர்கள் வாழ்வியலையும் நிலைகுலைய செய்கிறது என்ற உண்மையை அப்பட்டமாக ஆசிரியர் பதிவு செய்திருக்கிறார். நம்முடைய வாழ்வு நாம் வாழ்ந்து மடிவோம்.

எதற்காக சமூகத்திற்கு பதில் சொல்ல வேண்டும் என்ற கேள்வியையும் கேட்க வைத்திருக்கிறது இந்த நாவல். மாதொருபாகன் தொடர்ச்சியாக அர்த்தநாரி என்ற நாவலை எழுதியிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

காளிக்கும் பொன்னாவிற்கும் திருமணமாகி பல வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லை. குழந்தை இல்லை என்ற குறையை தவிர வேறு எந்த குறையும் இல்லாமல் இருக்கிறார்கள். அம்மா சீராயி எப்படியாவது தன் மகனுக்கு பிள்ளை பிறக்க வேண்டும் என்று வேண்டாத தெய்வம் இல்லை. சீராயியோடு சேர்ந்து சம்மந்தி வல்லாயியும் கூடி பேசி ஒரு முடிவுக்கு வருகிறார்கள். அப்படி முடிவுக்கு வரும் பொழுது பெரு நோம்பி என்ற விழாவிற்கு பொன்னாவை அனுப்பினால் நம் சந்ததி வளரும் என்று சதி திட்டத்தில் பொன்னாவும் சிக்குகிறாள். அதை காளியும், பொன்னாவும் எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பதை மிகவும் சுவாரஸ்யமாக எடுத்துச் சென்றிருக்கிறார் ஆசிரியர்.

பிரிட்டிஷ் இந்தியாவின் இறுதிக் காலகட்டத்தில், திருச்செங்கோடு அருகே உள்ள கிராமத்தில் நிகழ்கிறது கதை. பொன்னாவை, அவளது பதினாறாம் வயதில் காளி காதலித்து மணமுடிக்கிறான். திருமணமாகிப் பன்னிரண்டு வருடங்களாக அவர்களுக்குக் குழந்தை இல்லை. அவர்களும் செய்யாத பரிகாரங்கள் இல்லை, வேண்டாத தெய்வங்கள் இல்லை. 'காட்டு சாமிகளுக்கு கிடா வேண்டுதல், கோயில் சாமிகளுக்கு' பொங்கல் பூசை' என்று எல்லா முயற்சிகளையும் எடுக்கின்றார்கள். குழந்தை இல்லாமையால், இருவரும் அவரவர் வட்டங்களில் அவரவர் அன்றாடங்களில் சமூகத்தில் எதிர்கொள்ளும் விலகல், தனிமை ஆகியவற்றைப் பற்றி பேசுகிறது நாவல்.

மிக விரிவான ஆராய்ச்சி மூலம், அக்காலத்துக் கொங்கு சமூகத்தை அவர்கள் வாழ்க்கை முறையை, விழுமியங்களை, சடங்குகளை நம் கண்முன் நிறுத்துகிறார் ஆசிரியர். அதோடு



நாவலில் அமைந்திருக்கும் கொங்கு வட்டார வழக்குகளும் வாசிப்பதற்கு அலாதியான உணர்வை அளிக்கின்றன. மனிதர் களுக்கு குழந்தைகள் என்பது வெறும் உயிரின நீட்சியில்லை, அது அவர்களது அகங்காரத்தின் நீட்சியும் கூட. உயிரின நீட்சியை உத்திரவாதப்படுத்த உருவாகியதுதான் குடும்ப அமைப்பு. அதன் பகுதியாகதான் ஆண் பெண் என்ற இருமைகள் அழுத்தமாக உருவாக்கப்பட்டன. ஆணிற்கு என்று ஒரு சமூக பாத்திரமும் பெண்ணிற்கென்று ஒரு சமூக பாத்திரமும் நிலைகொண்டது. இந்த உயிர்களின் தேடல்கள் அடங்கியதே சமூகமாகும். சமூகத்தின் ஒரு அங்கமே ஆணும் பெண்ணும். ஆனால், உயிர் நீட்சியின் அடிப்படையான இயற்கை வளம் மனிதனைச் சுற்றிக் குறைந்துகொண்டே வருகிறது. இது அவனது அகங்காரத்தையும் மாற்றிக்கொண்டுதான் இருக்கிறது.

இந்த மாறிவரும் சூழலில், குடும்ப, சமூக அமைப்புகள் பரிசுத்தமான ஆண்மை குணம், பரிசுத்தமான பெண்மை குணம் என்ற தேவைகளைத் தாண்டி வந்துகொண்டிருக்கின்றன. ஆணும் பெண்ணும் இணைந்திருக்கும் இந்த அர்த்த நாரீஸ்வரார் வடிவம், ஆண் - பெண் சம உரிமைகளின் குறியீடு என்பதைவிட, மனிதனின் ஆதார குணங்களின் குறியீடாகவே பார்க்க முடியும். மனிதன் ஆணாக மட்டுமாக, இல்லை பெண்ணாக மட்டுமாக சிந்திப்பதைத் தாண்டியதுமே, பெண்களின் சம உரிமைகள் தானாக நிலைபெற துவங்கும்.

இந்த நாவல் காட்டும் சமூகப்பார்வை இன்று பெரிய அளவில் மாறிவிடவில்லையென்றாலும், சமூக அமைப்பு மாறிக்கொண்டுதான் இருக்கிறது. இந்த நாவல் காட்டும் விழுமியங்களும் வாழ்க்கைமுறையும் எல்லாம் இயற்கையைச் சார்ந்தவை. இதில் வரும் வழக்காடல்களும், மரங்களும், சின்ன சின்ன இயற்கைக் குறிப்புகளும் எல்லாம் அக்கால வாழ்க்கைமுறையின் ஆவணங்களாகும். ஆசிரியர் இவற்றை

முறையாக ஆராய்ச்சி செய்து இந்த நாவலில் ஆவணப்படுத்தி இருப்பதைக் காணமுடிகிறது.

**ஆய்வுத் தலைப்பு**

''மாதொருபாகன் நாவல் வெளிப்படுத்தும் சமூகம்'' என்னும் பொருண்மையில் ஆய்வுத்தலைப்புத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

2010-இல் வெளிவந்த நாவலுக்கு 2014-இல் நான்கு ஆண்டுகள் கழித்தே எதிர்ப்பும், விமர்சனமும் வலுக்கிறது. இது திட்டமிட்ட பரப்புதலாகவும் இருக்கலாம். ஆனால், இந்நாவல் படைப்பாளனை எழுத்துலகம் பெரிதும் அறியும் படி செய்தது. இந்நாவலின் எதிர்ப்பும் விவாதமும். ஒரு வகையில் படைப்பு சுதந்திரத்தை பறிப்பதாகவும் இருந்தது. இப்படைப்பின் மீதான பண்பாட்டுக் கேள்விகளே, இந்நாவலை ஆராய்தலுக்கு உட்படுத்த வேண்டிய நோக்கமாக அமைந்தது.

**ஆய்வுக் கருதுகோள்**

மனித வாழ்க்கையின் குடும்ப அமைப்பு எண்பது சமூக உருவாக்கத்தின் அடிப்படையாகும். குழந்தையற்ற பெண்கள் கர்ப்பமுறுவதற்கான மாற்று ஏற்பாடாக தேர்நோம்பியைக் காண முடிகிறது. பண்பாட்டுக்கான உளவியல் தளர்வை இச்சமூகம் எப்படி ஏற்படுத்திக் கொள்கிறது. வேற்று ஆணுடன் சேர்ந்து கருவறுவது இயல்பாய் இருப்பதா, அல்லது இயல்புக்கு மாறானதா என்பதை ஆராய்வதே இந்த ஆய்வின் கருதுகோளாகும்.

**ஆய்வு முன்னோடி**

மாதொருபாகன் நாவல் குறித்து தமிழ் எழுத்து உலகில் தீவிர விவாதம் நிகழ்ந்துள்ளது அதன் அடிப்படையில் நாவலைச் சார்ந்தும், எதிர்த்தும் பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஆனால்



கல்விச் சூழல் சார்ந்த ஆய்வினை யாரும் மேற்கொள்ளவில்லை. எனவே, அத்தகைய விமரிசனங்களையே முன்னாடி களமாக இந்த த ஆய்வு எடுத்துக்கொள்கிறது.

**ஆய்வு எல்லை**

பெருமாள் முருகனின் 'மாதொருபாகன்' என்னும் இந்நாவல் முழுமையும் இவ்வாய்வேட்டிற்கான ஆய்வு எல்லையாகும்.

**ஆய்வு ஆதாரங்கள்**

பெருமாள் முருகனின் மாதொருபாகன் என்னும் இந்நாவல் இந்த ஆய்வின் முதன்மை ஆதாரமாகவும், களவு வாழ்க்கைச் சார்ந்த பண்பாட்டு நிகழ்வுகளை அடியொற்றிய சில கருத்தாக் கங்களும், இவ்வாய்வு சார்ந்த சில இணைய ஆய்வுக் கட்டுரைகளும் இவ்வாய்வின் துணைமை ஆதரங்களாக அமைகின்றன.

**ஆய்வு அணுகுமுறை**

பெண், ஆண் பொருத்தப்பாட்டை ஒப்பிட்டு நோக்கும் இடங்களில் ஒப்பிட்டு முறைத் திறனாய்வாகவும், பாலியல் சுதந்திரம் சார்ந்து ஆராய்கையில், இது உளவியல் ஆய்வாகவும், களவு முறையும், சமகால பழங்குடிகளின் திருமணத்திற்கு முந்தைய உறவு நிலையையும் ஆராயுமிடத்தில் பண்பாட்டு ஆய்வாகவும், இவை அனைத்தும் சார்ந்து ஆராய்வதால், வரலாற்று, சமூகவியல், திறனாய்வாகவும், இத்தகைய அணுகுமுறையில் இவ்வாய்வு அமைகின்றன.

**ஆய்வேட்டின் அமைப்பு**

இவ்வாய்வேடு முன்னுரை முடிவுரை நீங்கலாக மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை,

முன்னுரை

| | | |
|---|---|---|
| இயல் ஒன்று | : | தமிழ் நாவல் வரலாற்றில் மாதொருபாகன் |
| இயல் இரண்டு | : | மாதொருபாகனில் பெண் புனைவுகள் |
| இயல் மூன்று | : | மாதொருபாகனில் ஆண் புனைவுகள் |

முடிவுரை

துணை நூற்பட்டியல்

பின்னிணைப்புகள்

என்று கட்டமைக்கப்பட்டுள்ளது.

**இயல் விளக்கம்**

### இயல் – 1 – நாவல் வரலாற்றில் மாதொருபாகன்

'நாவல் வரலாற்றில் மாதொருபாகன்' என்ற முதலாம் இயலாக இவ்வாய்வேடு அமைந்துள்ளது. நாவல் வரலாற்றில் பல நாவல்கள் வந்தாலும், சில நாவல்கள் மட்டும் சமூகத்தால் பெரிதும் கவனிக்கப்படுகின்றன. அந்த வகையில் மாதொருபாகன் முக்கிய இடம் பெறுகின்றன. தமிழ்ச் சமூகத்தில் திருவிழாவின் பொழுது ஏற்படும் பாலியல் சுதந்திரம் குறிப்பிடத்தக்கதாகும். மற்றொரு ஆணோடு சேர்ந்து குழந்தைப் பெறுதல் என்ற பண்பாட்டின் மீதான கேள்வி இந்நாவலை பெரும் பேசு பொருளாக்கி இருக்கிறது. எனவே. நாவல் வரலாற்றில் மாதொருபாகன் தனித்த இடத்தைப் பெறுவது உறுதி செய்யப்படுகிறது. இம்முறையில் இம்முதலாம் இயல் நகர்கிறது.

### இயல் – 2 : மாதொருபாகனில் பெண் புனைவுகள்

'மாதொருபாகனில் பெண் புனைவுகள்' என்னும் இவ்விரண்டாம் இயலில் பொன்னா, சீராயி, பொன்னா மாமியார், காத்தாயி என பல பெண்கள் பயணிக்கின்றனர். பெண்ணுக்கான உளவியலை பெண் பாத்திரங்கள் வழியே ஆராய முடிகிறது. மேலும், பெண்களை இந்த ஆணாதிக்கச் சமூகம் எப்படி சித்தரிக்க விழைகிறது என்ற நோக்கிலும் இவ்வியல் ஆராயப்படுகிறது.



### இயல் – 3 : மாதொருபாகனில் ஆண் புனைவுகள்.

'மாதொருபாகனில் ஆண் புனைவுகள்' 'என்னும் இம்மூன்றாம் இயலில் காளி, முத்து, நல்லையா, மண்டையன், தொடியன் என்னும் பல ஆண் பாத்திரங்கள், ஆணாதிக்க பொது புத்தியுடன் படைக்கப்பட்டு இருப்பதைக் காண முடிகிறது. பெண்ணை தனக்கான காம இச்சைக்கான நுகர்வுப் பொருளாகவே பார்க்கப் படுவதை உணர முடிகிறது. எனவே, ஆண் பாத்திரங்களின் வழி இக்கருத்தினை ஆராய முற்படுகிறது.

**முடிவுரை**

ஒவ்வொரு இயலிலும் கண்டறியப்பட்ட ஆய்வு முடிவுகளில் இன்றியமையாதவைகளைத் தொகுப்பாக தொகுத்து முடிவுரையில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பகுத்தாய்ந்து விளக்குதாக முடிவுரை அமைந்துள்ளன.

**துணை நூற் பட்டியல்**

ஆய்விற்குத் துணை நின்ற நூல்கள், இணையக் கட்டுரைகள், இதழ்கள், இணையதள முகவரிகள் முதலியன அகர வரிசைப் படுத்தப்பட்டு துணை நூற்பட்டியலில் இடம்பெறுகின்றன.

**பின்னிணைப்புகள்**

ஆய்வுக்குப் பயன்பத்தப்பட்ட மாதொருபாகன் நாவல் ஆசிரியரின் படமும், நாவலின் முகப்பு பக்கமும் பின்னிணைப்புகளாக கொடுக்கப்பட்டுள்ளன.

# 1. தமிழ் நாவல் வரலாற்றில் ‘மாதொருபாகன்’

சமூதாயத்தின் மரபு, பண்பாடு பழக்க வழக்கங்கள் இவற்றினை நாம் ஒரு படைப்பின் வாயிலாக மிக நுட்பமாக அறிந்துகொள்ள இயலும், அதுமட்டுமின்றி ஒரு படைப்பிலக்கியம் என்பது பன்முக நோக்கில் ஏதேனும் ஒரு சமூகத்தின் வாழ்வியலைப் பிரதிபலிப்பதாக அமையும். அவ்வெளிப்பாட்டின் தத்துவம் இன்றளவும் தமிழ்ச்சமுகத்தில் பண்பாடுகளாகவும் மரபுகளாகவும் மக்கள் வாழ்வியலோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்துள்ளன என்பதை இவ்வுலகம் அறிந்துள்ளது. அத்தகையப் படைப்பிலக்கியங்களில் ஒன்றாகத் திகழும் புதினத்தின் தோற்றத்தினையும் மாதொருபாகன் நாவலில் படைக்கப்பட்ட பாத்திரங்களின் உளவியலையும், ஆண், பெண் என்ற பேத அமைப்பினையும் விளக்குவதாக இவ்வியல் அமைகிறது.



**புதினம் – சொற்பொருள் விளக்கம்**

‘‘உரைநடையில்’’ அமைந்த புனைகதை அல்லது ஆண், பெண்களாகிய மாந்தர்களின் வாழ்க்கையின் உணர்ச்சி நிறைந்த நிகழ்ச்சிகளைச் சித்தரித்துக்காட்டுவது’’[1] என்று புதினத்திற்குப் பொருள் விளக்கம் தருகிறது. இலக்கியத் திறனாய்வியல், மனித மனம் கதையிலும் வரலாற்றிலும் ஆர்வம் காட்டுவது உணர்ச்சிகளுக்கு ஒரு வடிவம் தரவேண்டும் என்று விரும்புவது, ஒருவர் வாழ்வே நாவல் எனலாம் எனும் கருத்தாக்கம் இதன்வழி பெறப்படுகிறது.

**புதினம் – அறிஞர்களின் கருத்துக்கள்**

‘‘எழுதப்பட்ட காலத்தில் உண்மையான வாழ்க்கையினையும் பழக்க வழக்கங்களையும் வெளிப்படும் ஓவியமே நாவல் என்பர் கிளாரா ரீவி’’[2] நடப்பியல் நிகழ்வுகளை மையப்படுத்தி கதையாக்கமும், பண்பாடுகளும் வாழ்வியல் நெறிகளோடு ஊடாடுதல் நாவல் என்பது கூறும் மேலைநாட்டு அறிஞரின் கருத்து நாவலின் உண்மைத் தன்மையை வெளிக் கொணர்கிறது எனலாம்.

‘‘உரைநடையில் அமைந்த குறிப்பிடத்தக்க நீட்சியையுடைய கதையே நாவல், அது படிப்பவர்களை ஒரு கற்பனையான உண்மை உலகிற்கு அழைத்துச் செல்கிறது படைப்பாளர் உருவாக்கியதால் இந்த உலகம் ”புதியது’’[3] என்று காதரைன் லீவர் கூறுகிறார்.

‘‘புதினத்தை எழுதுபவர் அதன் முறை அல்லது அமைப்பு பற்றிய மரபான எந்த விதிகளையும் பின்பற்ற வேண்டும் என்பதில்லை. அவர் மூன்று பெரும் பகுதிகளைக் கொண்ட கதையோ, மூன்று பக்க அளவுடைய கதைகளையோ எழுதலாம் அவர் எத்துணை அளவு சிறப்பாகக் கதையை கூற முடியுமோ அத்துணையளவு அதைக் கூற வேண்டியதே அவர் கடமை மனிதத் தன்மை அல்லது வாழ்க்கை நிகழ்ச்சிகள் முழுமையுமே

அவருடைய கதைக் கருவுக்கு நிலைக்களனாகும். ஏனைய இலக்கிய வடிவங்களை விடப் புதினம் எழுதுதற்குரிய விதிகள் மிகச்சிலவேயாகும்."[4]

இவ்வாறு சி.டி. வின்செஸ்டர் புதினத்திற்கு விளக்கம் கூறுகிறார். மேற்கண்ட சான்றோர்களின் கூற்றுப்படி கற்பனை நயம்மிக்க உண்மை நிகழ்வுகளைக் கொண்ட வாழ்வியலோடு தொடர்புடைய புனைகதையே நாவல் என்றும், அது மனித வாழ்க்கையை அடியொற்றியதாக அமைய வேண்டும் என்று அறியமுடிகிறது.

**நாவலின் – இலக்கணம்**

மேலைநாட்டார் தொடர்பால் வளர்ந்த துறை, இந்நாவல் துறை, "நம் வாழ்க்கையை அவ்வாறே எடுத்துக்காட்டுவதாகக் கதை அமைய வேண்டுவதில்லை, வாழ்க்கையோடு இயைந்ததாக அமைய வேண்டும், மக்களின் வாழ்க்கையைவிட உயர்ந்த வாழ்க்கையாக, பெருமைமிக்க வாழ்க்கையாக ஆற்றல் மிக்க வாழ்க்கையாகக் கதையின் கற்பனை அமையலாம். ஆயினும் மக்களின் உணர்ச்சிகளையும் குறிக்கோள்களையும் ஒட்டிய தாகவே அந்தக் கற்பனை வாழ்க்கை அமைதல் வேண்டும். கூடியவரையில் ஆசிரியர், தமக்கு நன்கு தெரிந்த வாழ்க்கைப் பகுதிகளையும் இடங்களையும் அமைத்தே நாவல் எழுதுதல் நல்லது"[5] என்ற மு. வரதராசனார் அவர்கள் நாவல் எனும் புனை கதை தளத்திற்கு இலக்கணம் கூறுவது மேலை நாட்டறிஞர்களின் கூற்றுகளுக்கு ஏற்ப உள்ளது என்பதைவிட அதைவிடவும் ஆகச்சிறந்ததாக உள்ளது அவரின் இக்கூற்று. இதன் வாயிலாக ஒரு புதினத்தின் மையப்பொருள் மற்றும் கதையாக்கம் என்பன எவ்வாறு அமைதல் நலம்பயக்கும் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.



**தொடக்க காலப் புதினம்**

மேனாடுகளில் புதினம் பழினேழாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றதாகும். "ஆங்கில நாட்டில் புதினம் பதினேழாம் நூற்றாண்டில் திடீரெனத் தோற்றம் பெற்றது."[6] என வால்டர் ஆலென் என்பவர் கூறுகிறார். "இது மனிதனின் ஈடுபாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றமாகும்"[7] என்பர் இராபர்ட் இலிடில், மேலும்,

"தொபிஷ் சுமோலெட்டு, என்றி பீல்டிங்கு போன்ற எழுத்தாளர்கள், டாம்ஜோன்ஸ், அம்பெரி கிளின்கெர், இரோடெரிக் ராண்டம், ஜோசம் ஆண்டீரூஸ், பெரிக்கிரின் பிக்கிள் முதலிய வீரர்களின் தீரச்செயல்களைப் பற்றி நீண்ட புதினங்களை எழுதியுள்ளனர். கதைக்குரிய வீரன் இடந்தோறும் திரியும் போது அவன் ஆற்றும் தனக்கு ஏற்படும் இடர்களைக் கடக்கிறான். தன் பகைவர்களோடு போரிட்டு வெற்றிபெற்று முடிவில் பெரும் பொருளையும் அழகான மனைவியையும் எய்திச் சமூதாயத்தில் மதிப்பிற்குரிய இடத்தைப் பெறுகிறான். இத்தகைய வீரனைப்பற்றிய கதைக் கருத்தை யொட்டிய புதினம் எழுதும் எண்ணம் 17-ம் நூற்றாண்டைச் சார்ந்த செர்வான்ட்டெஸ் என்பவர் எழுதிய பான் கவிக்சாட் என்ற புதினத்தினின்றும் தோன்றியது என்பார்"[8]

இவ்வகையைச் சேர்ந்த புதினங்களில் பெரிதும் செல்வாக்குடையது என்றி பீல்டிங் எழுதிய "டாம்ஜோன்ஸ்" என்ற புதினமாகும். மேலும் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய பல ஆங்கிலம் புதினக் கதைகளின் போக்கை அறிந்து கொள்ளுதற்குச் சான்றாக விளங்குகிறது. இவ்வாறு மேலைநாட்டின் புதின வரலாறானது 17ம் நூற்றாண்டிலேயே தொடங்கி சிறப்புடன் விளங்கியுள்ளது என்பதனை இதன்வழி அறியமுடிகிறது.

## தமிழ்ப் புதினம் – தொடக்கநிலை

தமிழில் புதின இலக்கியம் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியதாகும். அக்காலம் புதினம், சிறுகதை போன்ற இலக்கிய வடிவங்கள் தோன்றுவதற்கு ஏற்றதாய் இருந்தது. அக்கால இலக்கிய போக்கு உரைநடை இலக்கியத் திற்கு இடந்தந்தது. நாட்டுக்கதைகளும் புராணங்களும் அறிய உரைநடையில் எழுதப்பெற்றன. இக்கதைகள் தொடக்க காலப்புதினங்களில் அங்குமிங்கும் இடம்பெற்றன.

தமிழ்ப் புதினம் முதலில் ஓர் உரைநடைக் காப்பியமாகக் கருதப்பெற்றது. இடம், காலம், முதலியவற்றின் வருணனைகளும் பாத்திரங்களின் உயர்வு நவிற்சியான வருணனைகளும் கதைத் தலைவனும், தலைவியும், தன்னிகரற்றவர்களாகப் படைக்கப் படுதலும் ஆகிய காப்பியத்தன்மைகள் தொடக்க காலப் புதினங்களின் இயல்புகளாக அமைந்தன. இதன் வாயிலாக தமிழ்ப்புதினத்தின் தொடக்கக்கால கதைக்களத்தின் தோற்றுவாய் எங்கிருந்து தொடக்கம் பெற்று கதையாக பெற்றுள்ளது என்பதனை அறியமுடிகிறது.

## தொடக்க காலப் புதினங்கள்

1876-ல் வேதநாயகம் பிள்ளை என்ற அறிஞர் முதன் முதலாகத் தமிழுக்கு நாவல் இலக்கியத்தை அளித்தார். மாவட்ட நீதிபதியாக இருந்தவர், ஆங்கிலம் அறிந்தவர், ஆங்கிலேயருடன் தொடர்புடையவர், ஆங்கிலத்தில் நாவல் இலக்கியம் வளர்ந்திருப்பதையும் அதைப் பொழுது போக்காக பலர் படித்துப் பயன் பெறுவதையும் உணர்ந்து தமிழர்களும் அவ்வாறு படிக்க வாய்ப்புப் பெறவேண்டும் என்று சாடினார். அந்த காலத்தில் செய்யுள் நூல்கள் பல எழுதிப் புகழ்பெற்ற மீனாட்சி சுந்தரம் பிள்ளையுடன் நெருங்கிய தொடர்பு உடையவர். தாமும் பாடல் இயற்றியவர். ஆனால் செய்யுள் நூல்களை எல்லோரும் படிக்க முடியாது என்பதை உணர்ந்து உரைநடைவாயிலாக நல்ல கருத்துக்களை உணர்த்த வேண்டும் என்ற ஆர்வம் கொண்டார். கதை கேட்கும் ஆர்வம் மக்களுக்கு இயல்பாக இருப்பதால் நாவல்கள் வாயிலாகத் தாம் உணர்த்த விரும்பியவற்றை உணர்த்த முன்வந்தார்.

பிரதாப முதலியார் சரித்திரம் (1876), சகுண சுந்தரி (1887) என்னும் நாவல்களை இயற்றினார். அவற்றில் பல வகை மாந்தர் களைப் படைத்தார். பல வகை உணர்ச்சிகளை அமைத்தார். பல நீதிக் கருத்துக்களைப் புகட்டினார், தாம் பெற்ற அனுபவங்களைக் கொண்டு, குடும்ப சமுதாய வாழ்க்கை நிலைகளைச் சொல்லோவியமாக மாற்றிக் காட்டினார். தமிழில் புனைகதை எனும் புதினத்தினை அறிமுகம் செய்ததோடு, அவற்றிற்கான கதையமைப்பின் வழி நடப்பியல் நிகழ்வுகளைக் கட்டமைத்துக் காட்டியவர் மாயுரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள். இவரே தமிழ்ப் புதினத்தின் தந்தை என்றும் அழைக்கப்படுகிறார்.

1885ல் சித்தி லெவ்வை மறைக்காயர் முகம்மது காசிம் எனும் இலங்கைப் படைப்பிலகியவாதி 'அசன்பேயுடைய கதை' எனும் நாவலை எழுதினார். இந்நாவல்

"தமிழின் இரண்டாவது நாவலாகவும் இலங்கையின் முதல் தமிழ் நாவலாகவும் திகழ்கிறது."[9]

## தமிழ்ப் புதினத்தின் வகைகள்

நாவல்களைப் பொதுவாக இருபெரும் பிரிவுகளாக வகைப்படுத்துவர் இலக்கியத் திறனாய்வாளர்கள்.

1. சமூக நாவல்
2. வரலாற்று நாவல்

கதைப் பின்னல்களைக் கொண்டுதான் நாவலின் இப்பிரிவுகள் அமைகின்றன எனலாம்.